**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

19.09.2025

O.S. No. 120/2022

D.W. 1 திரு. சிவபாலகிருஷ்ணன்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) -**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஏ. படித்துள்ளேன். ஒரு திருமணம் செய்ய வேண்டும் என்றால் அந்த தம்பதிகள் சம்பந்தப்பட்ட என்ன என்ன ஆவணங்கள் வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். என்ன என்ன ஆவணங்கள் வேண்டும் என்றால் மணமகன், மணமகள் அவர்களின் ஆதார் அடையாள அட்டை, வயதுக்கான சான்றிதழ், கோவிலில் வைத்து திருமணம் நடத்துவதால் இருவருமே இந்து மதத்தை சேர்நதவர்களாக இருக்க வேண்டும், அதற்கான ஆவணங்கள் பார்ப்போம். அது தவிர திருமண அனுமதிக்காக நாங்கள் வைத்துள்ள படிவத்தை அவர்கள் பூர்த்தி செய்து தர வேண்டும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் சுகேஷ்குமரன் அவர்கள் இந்து என காட்டும் ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது. அவருடைய லட்சுமி அம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் தந்துள்ள மாற்றுச்சான்றிதழில் அவர் இந்து என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கின் வாதியை எனக்கு தெரியாது. எனக்கு சொந்த ஊர் எது என்றால்

வடக்கு குண்டல். வடக்கு குண்டலிலிருந்து அஞ்சுகிராமம் சுமார் 8 கிலோ மீட்டர் இருக்கும். வாதியின் உறவினர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மத்திய அரசிடமிருந்தோ, மாநில அரசிடமிருந்தோ குன்றன் கோவிலில் திருமணங்கள் நடத்தி வைப்பதற்காக அனுமதி எதுவும் வாங்கியுள்ளோமா என்றால் இல்லை. திருமண பதிவு சட்டங்களின் கீழ் அவ்வாறு எதுவும் அனுமதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. திருமண பதிவு சட்டங்களின் கீழ் அவ்வாறு எதுவும் அனுமதி வாங்காததால் திருமண பதிவு சான்றிதழ் எதுவும் எங்கள் கோவிலிருந்து தருவதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல, அவ்வாறு அரசு அனுமதி எதுவும் தேவையில்லை. எங்கள் சுற்றுவட்டாரத்தில் இந்து அறநிலைய கட்டுப்பாட்டில் சுமார் 4, 5 கோவில்கள் இருக்கும். அந்த கோவில்களில் முறையான அனுமதி பெற்று அதன்பேரில் திருமணம் நடத்தி அதை பதிவும் செய்து கொடுப்பார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த கோவில்களுக்குசென்று எப்போதாவது என்ன என்ன நடைமுறைகளை பின்பற்றி திருமணங்கள் பதிவு செய்து கொடுக்கிறோம் என விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. திருமணம் செய்ய வருபவர்களுக்கு அதுதான் முதல் திருமணம் என காட்டுவதற்கு நாங்கள் ஆவணங்கள் எதுவும் பெறுவது இல்லை என்றால் சந்தேகம் இருந்தால் வாங்குவோம். அவ்வாறு சந்தேகம் இருக்கும்போது கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து அதற்கான கடிதம் வாங்குவோம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட திருமணத்திற்கு அவ்வாறு கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து சான்றிதழ் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கு சம்பந்தப்பட்ட திருமணத்தில் மணமக்களுக்கு ஏற்கனவே திருமணம் ஆகியிருந்ததா என்ற விவரம் அந்த சமயத்தில் எனக்கு தெரியுமா என்றால் மணமகளுக்கு ஏற்கனவே திருமணம் ஆகி விவாகரத்து ஆகியிருந்தது, சான்றிதழும் வைத்திருந்தார். அந்த விவரமும் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 2 ஆவணத்தில் மணமகள் ராஜஸ்ரீகத்திற்கு திருமணம் ஆகி 17.01.2009 தேதியிட்ட உத்தரவின் படி விவாகரத்து ஆகியுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 17.01.2009 தேதியிலிருந்து இந்த வழக்கு திருமணம் நடக்கும் வரையில் ராஜஸ்ரீகத்திற்கு வேறு திருமணம் நடந்திருந்ததா, ஒரு வேளை நடந்து விவாகரத்து ஆகி விட்டதா என காட்டும் ஆவணம் எதையும் நான் பார்க்கவில்லை என்றாலும் அவ்வாறு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். வழக்கு சம்பந்தப்பட்ட திருமணம் செய்து கொண்ட நபர்களுக்கு வயது வித்தியாசம் என்ன இருக்கும் என்றால் மணமகனை விட மணமகளுக்கு சுமாராக 12 வயது அதிகம் இருக்கும். அவ்வாறு வயது வித்தியாசம் என்பதால் கிராம நிர்வாக அலுவலரிடம் அந்த மணமகளுக்கு ஏற்கனவே திருமணம் ஆகியிருந்ததா, இல்லையா என காட்டும் சான்றிதழை பெற்றிருக்க வேண்டும் என்றால் சரியல்ல, தேவையில்லை. இந்து அறநிலையத் துறை கட்டுபாட்டில் உள்ள கோவில்களில் இந்து அறநிலையத் துறை சட்டப்படி ஒரு திருமணம் நடத்தி வைக்கும்போது அந்த மணமக்களுக்கு ஏற்கனவே திருமணம் ஆகவில்லை என்ற சான்றிதழை கிராம நிர்வாக அதிகாரியிடமிருந்து பெற வேண்டும் என்றால் சரியல்ல. முறையான

ஆவணங்கள் இருந்திருந்தால் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட திருமணத்தின் மணமகள் இந்து அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில் உரிய ஆவணங்கள் சமர்பித்து திருமணம் செய்திருப்பார் என்றாலும் நாங்கள் முறையான ஆவணங்கள் இல்லாமல் திருமணம் செய்து வைப்பதால் எங்கள் கோவிலில் வைத்து திருமணம் செய்துள்ளார்கள் என்றால் இல்லை. அவ்வாறு எங்கள் கோவிலில் செய்யப்படும் திருமணம் குறித்து விவரங்களை பதிவு செய்ய உரிய பதிவேடுகள் பராமரிக்கிறோமா என்றால் பராமரிக்கிறோம். அந்த ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் உள்ளது. நான் பொய்யான பதிவேடுகள் வைத்துள்ளதால்தான் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மையான பதிவேடுகள் தான் வைத்துள்ளோம். அருள்மிகு வேல்முருகன் குன்றம் கோவில் பணிகளுக்காக ஒரு மன்றம் வைத்துள்ளோம் என்றால் சரிதான். அதன் பெயர் அருள்மிகு வேல்முருகன் குன்றம் நற்பணி மன்றம். அதற்கான துணைவிதிகள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த துணைவிதிகளின் படி திருமணம் நடத்தி வைப்பதற்கான விதிகள் உள்ளது என்றால் இருக்கலாம். நான் அந்த நற்பணி மன்றத்தில் என்னவாக உள்ளேன் என்றால் தலைவராக உள்ளேன். நான் அந்த துணைவிதிகளை படித்து பார்த்தது கிடையாதா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த துணை விதிகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வாதி தரப்பில் தாக்கல் செய்த வா.சா.ஆ. 2 ஆவணத்தில் பெற்றோர்களும், உறவினர்களும் சேர்த்து உறுதி செய்யப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். இந்த திருமணம் நடந்த சமயத்தில் மணமகன் தரப்பில் பெற்றோர்கள், உறவினர்கள் என எத்தனை பேர்கள் வந்தார்கள் என்றால் சுமார் 5 பேர்கள் வந்தார்கள். மணமகள் தரப்பில் எத்தனை பேர், மணமகன் தரப்பில் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. இந்த திருமணத்தில் மணமக்களின் பெற்றோர்கள் கலந்து கொள்ளவில்லை என்றால் வரவில்லை. வா.சா.ஆ. 2 ஆவணத்தில் சாட்சிகளாக கையொப்பம் செய்தவர்கள் யார் என்று சொல்ல முடியுமா என்றால் ஒருவர் திருதமிழ் தேவன், மற்றொருவர் பெயர் தெரியவில்லை. அந்த சாட்சிகள் ராஜரீகம் மற்றும் சுகேஷ்குமரன் ஆகியோருக்கு என்ன உறவு என்று சொல்ல முடியுமா என்றால் அது எனக்கு தெரியாது. சாதாரணமாக எங்கள் கோவிலில் ஒரு நாளுக்கு எத்தனை திருமணம் நடக்கும் என்றால் அன்றைய தினம் 7 திருமணங்கள் நடந்தது. அந்த 7 திருமணங்களிலும் பெற்றோர்கள் இல்லாமல் யார் என்று தெரியாத நபர்களிடம்தான் சாட்சி கையொப்பம் பெற்றோமா என்றால் இல்லை. அந்த திருமணங்களை பொறுத்தவரையில் மணமக்களின் பெற்றோர்களிடம்தான் கையொப்பம் பெற்றோம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட திருமணம் பொறுத்தவரையில் மணமக்களின் பெற்றோர்கள் வந்துள்ளார்களா என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். ஒரு திருமணத்தை நடத்துவதற்கு திருமணத்திற்கு எத்தனை நாட்களுக்கு முன்னர் விண்ணப்ப படிவம் வாங்குவோம் என்றால் 10 நாட்களுக்கு முன்னர் வாங்குவோம். அந்த 10 நாட்கள் கால அவகாசமானது அவர்கள் கொடுத்துள்ள விவரங்களை விசாரித்து தெரிந்து

கொள்வதற்கு போதுமானது என்றால் சரிதான். அவ்வாறு உரிய கால அவகாசம் இருந்தும் மணமக்களுக்கு அது முதல் திருமணம் என்றும் முறையாக நடக்கும் திருமணம்தான் என்றும் காண்பிப்பதற்கு கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ் வாங்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தி-ருமணத்தை பொறுத்த வரையிலும் திருமணத்திற்கு 10 நாட்களுக்கு முன்பாகவே விண்ணப்ப படிவத்தை பெற்றுவிட்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ. 1 மற்றும் 2 ஆவணங்களின்படி விண்ணப்ப படிவங்கள் தந்த தேதி18.08.2021, நாங்கள் சரிபார்த்த தேதி 20.08.2021, திருமணம் நடந்த தேதி 26.08.2021. சாதரணமாக 10 நாட்கள் அவகாசம் தரும்போது இந்த திருமணத்தை பொறுத்த வரையில் அவசர கோணத்தில் விண்ணப்ப படிவம் பெற்று திருமண சான்றிதழ் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. விண்ணப்ப படிவத்துடன் கொடுக்கப்படும் ஆவணங்கள் அனைத்தையும் அசலுடன் ஒப்பிட்டு பார்த்துதான் ஏற்றுக்கொள்வோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 மற்றும் 2 விண்ணப்ப படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்படாததால்தான் அந்த ஆவணங்களின் உண்மை நகல் என குறிப்பிட்டு மனுதாரரின் கையொப்பமோ, அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது என்று சொல்லி எங்களின் கையொப்பமோ இல்லை என்றால் சரியல்ல. நான் பொய்யான ஆவணங்களின் அடிப்படையில், பொய்யான விண்ணப்பங்களை தயார் செய்து,

பொய்யான சான்றிதழை வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது என்றாலும் வாதிக்கு மானநஷ்ட ஈடு வழங்க கடமைப்பட்டவர்கள் என்றாலும் சரியல்ல.